பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை
16 04 2025 **WEDNESDAY** 6 30 **PM**
வணக்கம் – மாநிலச் செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு இயக்கத்தை பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.
2. மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்களை வழங்குவதற்கென 131 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டம் செயல்படுத்தப்படும் என்று தமிழக அரசு கூறியுள்ளது.
3. தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி மீண்டும் குற்றம் சாட்டியுள்ளது.
4. கல்வி நிறுவனங்களின் பெயர்களில் இடம்பெற்றுள்ள சாதிப் பெயர்களை நான்கு வாரத்திற்குள் நீக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
5. ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nitin Gupta** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<

சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு இயக்கத்தை பள்ளிகளுக்கும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சாலைப் போக்குவரத்துத்துறையுடன் இணைந்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளை தடுப்பதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியமாகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

>>>>>><<<<<

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், மீன் உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக மீன்வளத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் தெரிவித்துள்ளார்.

இன்று புதுச்சேரியில் மீனவர் நலனுக்கான திட்டங்களை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்பதற்கு முன்னர், 95 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி, தற்போது 184 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது என்றார்.

மீன்வளத்துறையின் வளர்ச்சிக்காக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களையும் திரு. ஜார்ஜ் குரியன் பட்டியலிட்டார்.

>>>>>><<<<<

மாற்றுத்திறனாளிகள் நல வாரியத்தில் பதிவு செய்தவர்களுக்கு வழங்கப்படும் ஈமச்சடங்குகளுக்கான உதவித்தொகை 17 ஆயிரம் ரூபாயிலிருந்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படுவதாக மாநில அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

இன்று பேரவையில் சமூகநலன் மற்றும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதற்கென 131 கோடி ரூபாய் மதிப்பிலான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் திருமதி. கீதாஜீவன் கூறினார்.

>>>>>><<<<<

திமுக மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது, மாநில சுயாட்சி குறித்த கோரிக்கையை வலியுறுத்தாதது ஏன் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வினவியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தற்போது தேர்தல் ஆதாயத்திற்காக இப்பிரச்சினையை திமுக அரசு கையில் எடுத்திருப்பதாக குற்றம் சாட்டினார்.

>>>>>><<<<<

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாக குறை கூறினார.

போதைப்பொருள் புழக்கமும் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திமுக அரசுக்கு எதிரான மனநிலையில் மக்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

திமுக அரசை அகற்ற வேண்டும் என்ற நோக்கில் தான் பிஜேபி-அஇஅதிமுக கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<

கல்வி நிறுவனங்களின் பெயர்களில் இடம்பெற்றுள்ள சாதிப் பெயர்களை நான்கு வாரத்திற்குள் நீக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதி திரு. பரதச்சக்கரவர்த்தி இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

நான்கு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்காத கல்வி நிறுவனங்களின் அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக திரு. **Bhushan Ramkrishna Gavai –** யை நியமிக்க தற்போதைய தலைமை நீதிபதி திரு. சஞ்சீவ் கன்னா பரிந்துரை செய்துள்ளார்.

திரு. சஞ்சீவ் கன்னாவின் பதவிக்காலம் அடுத்த மாதம் 13ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இதனையடுத்து புதிய தலைமை நீதிபதியாக 14ஆம் தேதி திரு. **B.R. Gavai** பதவியேற்பார் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>>><<<<<

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் - பொற்படாகுறிச்சி இடையேயான புதிய இருப்புப் பாதையில் அதிவிரைவு ரயில் சோதனை இன்று நடைபெற்றது.

ரயில்வே பாதுகாப்பு ஆணையர் திரு. சௌத்ரி தலைமையில் இந்த சோதனை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - முருகேசன் 34 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

ஈரோடு மாவட்டம், ஆசனூர் வனப்பகுதியிலிருந்து வெளியேறிய சிறுத்தை குடியிருப்பு பகுதிக்குள் நுழைந்ததை அடுத்து, அப்பகுதி மக்கள் அச்சமடைந்தனர்.

அந்த குடியிருப்பு பகுதியில் இருந்த கோழி இறைச்சிக் கடையை சேதப்படுத்திய சிறுத்தை, மீண்டும் வனப்பகுதிக்குச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - மூர்த்தி 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

சர்வதேச வாழை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர் டாக்டர் ஆர். செல்வராஜனுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல், இன்றிரவு மணி 9.15-க்கு செய்திச்சுடர் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகிறது.

மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

**>>>>>><<<<<**

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 37 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காலை முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

இந்த மழை காரணமாக, சென்னையில் விமான சேவை பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 33 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<**

<u>மாவட்டச் செய்திகள்</u>

நாமக்கல் மாவட்டத்தில் நவீன வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

**>>>>>><<<<<**

மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆட்சியர் திருமதி. சங்கீதா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

**>>>>>><<<<<**

வேலூர் மாவட்டம், காட்டுக்கொல்லை கிராமத்தில் வக்ஃப் நில விவகாரம் தொடர்பாக கோட்டாட்சியர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

**>>>>>><<<<<**

தூத்துக்குடி மாவட்டம், நல்லூர் ஊராட்சியில், பிரதமரின் வீட்டுவசதி திட்ட கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திரு. இளம் பகவத் இன்று ஆய்வு செய்தார்.

**>>>>>><<<<<**

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Nitin Gupta** வெள்ளிப்ப தக்கம் வென்றார்.

சவுதிஅரேபியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 18 வயதுக்குட்பட்டோருக்கான 5 ஆயிரம் மீட்டர் நடைப் போட்டியில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<**

உலக கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Saurabh Chaudhary – Suruchi Inder Singh** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் கலப்புக் குழு பிரிவின் தகுதிச் சுற்று ஆட்டங்களில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் இந்த இணை இறுதிச்சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது.

**>>>>>>END<<<<<**